1991 சனவரி 23]

கோவைக்கு, சிங்காநல்லூருக்குச் செல்லக் கூடிய நிலை இருக்கிற காரணத்தால் இந்தப் பகுதியில் படுக்கை வசதியோடு கூடிய ஒரு மருத்துவமனையை துவங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

கால்நடை கிளை நிலையங்களை தரம் உயர்த்தல்.

**9421*—திரு. சி. சண்முகம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலந்தூர், நந்தம்பாக்கம் கால்நடை கிளை நிலையங்களை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு முன் வருமா ?

(ஆ) அந்நிலையங்களில் போதுமான கருவூட்டல் மருந்துகள் இல்லை என்ற காரணத்தால் அவற்றை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) ஆலந்தூர் மற்றும் நந்தம்பாக்கம் கால்நடை கிளை நிலையங்களில் செயற்கை முறை கருவூட்டல் மருந்துகள் எப்போதும் உள்ளன. இல்லை என்ற நிலை எப்போதும் ஏற்பட்டது இல்லை.

திரு. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதியில் நந்தம்பாக்கம், இராமாவரம், மணப்பாக்கம் பகுதிகளைச் சுற்றியுள்ள அத்தனை இடங்களுக்கும் நந்தம்பாக்கத்தில் இருக்கும் ஒரு சிறிய மருத்துவமனையே பயன்படுவதால், அதை சைதாப்பேட்டையிலுள்ள ஒரு பெரிய மருத்துவமனை போல் ஆக்குவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சண்முகம் : அப்படி இல்லையென்றாலும் இனி வரும் ஆண்டிலாவது அரசின் நிதிநிலைக்கேற்ப அதைச் செய்து

தருமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதோடு, அப்படிச் செய்து தருவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய பிரேரணை அரசுக்கு அனுப்பப்படுமேயானால் அது பற்றி ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள் —விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

மயானப் பாதை அமைத்தல்.

1—

வினா எண். 62.—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், முருக்கம்பாக்கம் கிராமத்தில் ஆதிதிராவிட மயானப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், முருக்கம்பாக்கம் கிராமத்தில் ஆதிதிராவிட மயானப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

2—

பட்டா செய்து கொடுத்தல்.

வினா எண். 888—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாநகரம், தெலுங்குப்பாளையம் கிராமம், லிங்கனூர் ஆதிதிராவிட மக்கள் குடியிருக்கும் இடத்தைப் பட்டா செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பட்டா எப்பொழுது வழங்கப்படும் ?